விட்டு, இன்றைக்கு 19-ம் தேதி கொண்டு வருவது என்றால், அது விதிக்குப் புறம்பாக இருக்கிறது. அவர்கள் இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்ப விரும்பியிருந்தால், 10-ம் தேதி காலையில் கொண்டு வந்து கொடுத்திருக்க வேண்டும். அல்லது இரண்டொரு நாட்களிலாவது கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால், இரண்டு மூன்று நாட்கள் பிந்தினால் கூட, அது பிந்திப் போய்விடுகிறது என்று தீர்ப்புகள் இருக்கின்றன.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறிய பதில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு மனநிறைவு கொடுத்ததா இல்லையா என்று தெரியாது. விதிகளின்படி, ஆனால் 'earliest opportunity' யில் கொண்டுவரப்படவில்லை என்கின்ற காரணத்தால் பிந்திப் போய்விட்டது.

It is also not a matter of recent occurrence.

தங்களுக்கு (எதிர்க் கட்சித் தலைவரைப் பார்த்து) ஒன்று சொல்லுகிறேன். பட்ஜெட்டையும்விட, பேரவை உரிமைப் பிரச்சினை முந்துவது. பட்ஜெட் மிக முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரியும். அது அரசுக்குப் பணம் கொடுக்க வேண்டிய அவசரம் உள்ளது. ஆனால், அதையும்விட மிக மிக முக்கியமானது, இந்தப் பேரவையின் மானம். இந்தப் பேரவையின் மானம் பெரியது. அதுபற்றி உடனடியாகச் சொல்லியாக வேண்டும் என்று விதி இருக்கிறது. அப்படிச் சொல்லவில்லை. ஆகையால், அவை கூடிய 10-ம் தேதியிலிருந்து இத்தனை நாட்கள் ஆனபிறகு, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று நான் கூறி, அதற்கு என்னுடைய சம்மதத்தைக் கொடுக்க மறுக்கிறேன்.

3. அறிவிப்புகள்.

(i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை, இப்பேரவைமுன் அறிமுகப்படுத்தவும், இப்பேரவை அதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்.

4. அரசினர் மசோதாக்கள்.

(i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதாவை இப்பேரவையின் முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.